**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 05.02.2026

SC. 19/2023

அ.சா 1 – **முபாரக்**

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் **முபாரக்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **முபாரக்** | தந்தை பெயர் | அமிர்கான் |
| வயது | 37 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. அஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நான் மில்லட் நகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த பிப்ரவரி மாதம் 2009 ம் ஆண்டு ஒரு நாள் தேதி ஞாபகம் இல்லை. இரவு 8.30 மணியைபோல் நான் தொழுகைக்கு சென்றுவிட்டு , திரும்ப மில்லட் நகரில் பின்னால் உள்ள ஒரு பூங்காவில் நானும், இம்டியாஸ் , சயத் காதர், பாபுலால் ஆகியோர்கள் அன்று இரவு 9.00 மணியைபோல் உட்கார்ந்திருந்தோம். அப்போது இருவர் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்து எந்த ஏரியா என்று எங்களிடம் கேட்டார்கள். பின்னர், எனது நண்பர் இம்டியாஸ் என்பவரை வந்தவர்கள் கத்தியால் குத்திவிட்டார்கள். நாங்கள் சத்தம் போட்டோம் . உடனே அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். பின்னர், இம்டியாஸை இரு சக்கர வாகனத்தில் அழைத்து வந்து பாகளூர் ரோட்டில் உள்ள அம்மா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். பின்னர், அது சம்மந்தமாக நானும், ஜகீர் , ரபிக் , நாசிர், மனோகர் ஆகியோர்கள் காவல் நிலையம் சென்றோம்.

தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரை நான் எழுதவில்லை காரணம் எனக்கு எழுத வராது. இருட்டாக இருந்ததால், இம்டியாஸை குத்திய நபர்களை அடையாளம் அப்போது தெரியவில்லை. மேற்படி சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சேலத்தில் உள்ள சிறைக்கு , இம்டியாஸை யார் குத்தினார் என்று அடையாளம் காண்பிப்பதற்காக நானும் மற்றவர்களும், சென்றோம் , ஆனால் அங்கு என்ன நடந்தது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவத்தன்று 3 நபர்கள் பூங்காவிற்கு உள்ளே நுழைந்ததாகவும், அவர்கள் எங்களிடம் தகராறு செய்து அதில் ஒருவர் கத்தியால் இம்டியாஸை குத்திவிட்டு , அங்கிருந்து ஓடிவிட்டதாக புகாரிலும், போலிசார் விசாரணையிலும் கூறியும் அதேபோல், போலிசார் விசாரணையிலும் எதிரிகளை அடையாளம் தெரியும் என்றும் , அந்த அடையாளத்தை கூறிவிட்டு தற்போது எதிரிகளை அடையாளம் தெரியாது என்று கூறி எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் மற்ற சாட்சிகளும் சேலம் மத்திய சிறைக்குள் வைத்து 2 எதிரிகளை அடையாளம் காட்டி விட்டு தற்போது , அது பற்றி ஞாபகம் இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் கையெழுத்து போட்ட புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது காரணம் எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். காவல் நிலையத்தில் வைத்து 2

எதிரிகளின் போட்டோவை காண்பித்து அடையாளம் காட்ட சொன்னதின் பேரில் தான் நான் சேலம் மத்திய சிறையில் அடையாளம் காட்டினேன் என்றாலும் ஆனால் அவர்கள் யார் என்று ஞாபகம் இல்லை என்று சொன்னால் சரிதான்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேற்படி 2,3 எதிரிகளுக்கு செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை அவ்வாறே 1 ம் எதிரிக்கும் பாவிக்கும் படி கேட்டுகொண்டதால் அவ்வாறே பாவிக்கப்பட்டது.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

# IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 05.02.2026

SC. 19/2023

அ.சா 2 – பாபுலால்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் **பாபுலால்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **பாபுலால்** | தந்தை பெயர் | அப்துல் சுகூர் |
| வயது | 35 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. நான் மில்லட் நகரில் குடியிருந்து கம்யூட்டர் செண்டர் வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா 1 ஐ தெரியும். அவர் எனது நண்பர். அவரும் நானும் மில்லட் நகரில் குடியிருந்து வருகிறோம். கடந்த பிப்ரவரி மாதம் 2009 ம் ஆண்டு தேதி ஞாபகம் இல்லை. ஒரு நாள் இரவு 8.00 மணியைபோல் தொழுகைக்கு சென்று விட்டு , அன்று இரவு 8.30 மணிமுதல் 9.00 மணிஇருக்கும், நானும் இம்டியாஸ் , முபராக் , சையத் ஆகிய 4 பேரும் மசூதிக்கு எதிரே ஹவுசிங் போர்டுக்கு அருகே உள்ள பூங்காவிற்கு சென்று உட்கார்ந்திருந்தோம். அப்போது 3 நபர்கள் அங்கு வந்து , உங்களுக்கு என்ன வேலை இங்கு என்று கூறி எங்களை மிரட்டினார்கள். அதற்கு நாங்கள் பதில் தெரிவித்தோம், உடனே இம்டியாஸை கத்தியால் குத்தினார்கள். குத்திய நேரம் இருட்டு என்பதால் நான் அடையாளம் பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகள் தான் அங்கு வந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. பின்னர் காயம் பட்ட இம்டியாஸை மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனம் மூலம் நானும் சையத் என்பவரும் பாகலூர் ரோட்டில் உள்ள அம்மா மருத்துவ மனைக்கு கொண்டு சென்றோம். பின்னர், மேற்படி சம்பவம்

சம்மந்தமாக நாங்கள் 3 பேரும் மற்றும்  எங்கள் ஏரியாவை சேர்ந்த சிலரும் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றோம். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவத்தன்று 3 நபர்கள் பூங்காவிற்கு உள்ளே நுழைந்ததாகவும், அவர்கள் எங்களிடம் தகராறு செய்து அதில் ஒருவர் கத்தியால் இம்டியாஸை குத்திவிட்டு , அங்கிருந்து ஓடிவிட்டதாக  புகாரிலும், போலிசார் விசாரணையிலும் கூறியும் அதேபோல், போலிசார் விசாரணையிலும் எதிரிகளை அடையாளம் தெரியும் என்றும் , அந்த அடையாளத்தை கூறிவிட்டு தற்போது எதிரிகளை அடையாளம் தெரியாது என்று கூறி எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் காவல் நிலையம் சென்றிருந்தேன். ஆனால் யார் புகார் கொடுத்தார்கள் என்று, அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளதும் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை விசாரித்தார்கள் , ஆனால் வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்று எனக்கு தெரியாது.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேற்படி 2,3 எதிரிகளுக்கு செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை அவ்வாறே 1 ம் எதிரிக்கும் பாவிக்கும் படி கேட்டுகொண்டதால் அவ்வாறே பாவிக்கப்பட்டது.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

## IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 05.02.2026

SC. 19/2023

அ.சா 3 – சையத் காதர்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் **சையத் காதர்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **சையத் காதர்** | தந்தை பெயர் | அப்துல் கப்பார் |
| வயது | 39 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. அ.சா 1,2 ஐ எனக்கு தெரியும். அவர்கள் எனது நண்பர்கள். நான் மில்லட் நகருக்கு பின்னால் உள்ள கிட்டப்பா குட்டை என்ற இடத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த பிப்ரவரி மாதம் 2009 ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை. இரவு 8.30 மணியைபோல் தொழுகை செய்து விட்டு , மசூதியில் இருந்து 10 நிமிட நடந்து செல்லும் பூங்காவிற்கு நானும், இம்டியாஸ் , முபாரக், பாபுலால் ஆகிய 4 நபர்கள் சென்று உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது 2 நபர்கள் எங்களிடம் வந்து எங்களை பார்த்து உங்களுக்கு இங்கு என்ன வேலை என்று கேட்டார்கள். அப்போது அவர்கள் மது அருந்தியிருந்தார்கள். உடனே நானும், பாபுலால் என்பவரும் அந்த இடத்திலிருந்து பூங்கா கேட்டிற்கு வந்து விட்டோம். பின்னர் சத்தம் கேட்டு நானும் பாபுலால் என்பவரும் அந்த இடத்திற்கு வந்து பார்த்தபோது , கத்தியுடன் வந்த அந்த 2 நபர்களும் அங்கு இல்லை. அங்கு நடைபயணம் செய்த 4,5 நபர்களும் அங்கு கூடிவிட்டார்கள். நாங்கள் அங்கு பார்த்தபோது இம்டியாசுக்கு கத்தி குத்தியதால் குடல் லேசாக வெளியே வந்தது. அங்கிருந்தவர்கள் சட்டையை கழட்டி கட்டி விட்டார்கள். பின்னர், நானும், முபாரக் , பாபுலால் ஆகிய மூவரும் இம்டியாஸை இரு சக்கர வாகனத்தில் நானும் பாபுலாலும் இம்டியாஸை அம்மா மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம். பின்னர் நானும் , முபாரக் , பாபுலால் மற்றும் சிலரும் காவல் நிலையம் சென்றோம். போலிசார் அங்கு என்னை

விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவத்தன்று 3 நபர்கள் பூங்காவிற்கு உள்ளே நுழைந்ததாகவும், அவர்கள் எங்களிடம் தகராறு செய்து அதில் ஒருவர் கத்தியால் இம்டியாஸை குத்தியபோது நானும் எனது நண்பர்களும், சம்பவ இடத்தில் இருந்து அதை பார்த்ததாகவும், குத்திய நபர்களையும் பார்த்ததாகவும், போலிசார் விசாரணையில் குத்திய நபர்களை அடையாளம் கூறியதாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் காவல் நிலையம் சென்றிருந்தேன். ஆனால் யார் புகார் கொடுத்தார்கள் என்றும், அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் நீதிமன்ற விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேற்படி 2,3 எதிரிகளுக்கு செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை அவ்வாறே 1 ம் எதிரிக்கும் பாவிக்கும் படி கேட்டுகொண்டதால் அவ்வாறே பாவிக்கப்பட்டது.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur